பஞ்சாலைகளுக்கு ஏற்பட்ட சுபிட்... முதலாளிகளின் லாபவேட்டை முதலியவைகளெல்லாம் தீர்மானத்திலேயே குறிப்பிடப்பட்டிருந்தன.

ஜீவனத்துக்குப் போதிய கூலிகளை நிர்ணயிக்கும் சட்டம் இயற்றப்பட வேண்டுமென்று கோரிற்று. ஆனால், சட்டம் வரும் வரையில் காத்துக்கொண்டிருக்க முடியாது. உடனடியாக, மாகாணம் பூராவும், எல்லா மில்களில் ஒரே விகிதமான சம்பளங்கள் வேண்டும். யாருக்கும் 45 ரூபாய்க்குக் குறைவாக இருக்கக் கூடாது. உயர்தரக்கூலி, ரூ. 75-ல் ஆரம்பமாக வேண்டும். வருஷா வருஷம், சம்பள உயர்வு, 1 ரூபாய் கொடுக்கப்பட வேண்டும். இந்த வகையில் ஒவ்வொரு வேலைக்கும் கூலி விகிதத் திட்டம் ஒன்றைத் தயாரித்து, கிளர்ச்சி நடத்தி, நடைமுறையில் கொண்டுவர ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபித்துப் பேசுகையில், தோழர் ராமமூர்த்தி, முதலாளிகள் சம்பளங்களை குறைக்க, பஞ்சப்படியைக்குறைக்க சூழ்ச்சி செய்து வருவதை விளக்கினார்.

சர்க்காருடைய விசாரணைக் கமிட்டிகளே, இன்றுள்ள விலைவாசிகளில் மாதம் 75 க்கு குறைவில், ஜீவனத்தை நடத்த முடியாது என்று கூறுகின்றன. நாம், அதற்குக் குறைவாக சம்பள விகிதத்தை உடனடியாகக் கோருகிறோம்.

முதலாளிகள் நம்மைத் தாக்குவதற்கு முன்பே, நாம் முன்கை வைத்து, அவர்களைத் தாக்கி அவர்களுடைய திட்டங்களை உடைத்து, சம்பள உயர்வைப்பெறுவோம் என்று ...றினர்.

இரண்டாவதாக, பிரசவ சகாய ...ட்டத்தைத் திருத்தி, பிரசவத்திற்கு முன்பு $1\frac{1}{2}$ மாதமும், பிந்தி $1\frac{1}{2}$ மாதமும் தினம் 1 ரூபாய் வீதம் கொடுக்கப்படவேண்டும் என்ற தீர்மானத்தை தோழர் விருத்தகிரி பிரரேபித்தார்.

இதை ஆதரித்த தோழர் ரமணி, ...ச்சட்டத்திலிருந்து தப்புவதற்காக ...ன்று செய்யப்படும் சூழ்ச்சிகளை காரணத்துடன் எடுத்து விளக்கி...

...ர்மானம் ஓட்டுக்கு விடப்படு... தோழர் ராமமூர்த்தி ஒருதிருத்... யாகொண்டுவந்தார். இச்சட்டத் ...

(7-ம் பக்கம் பார்க்க)

கோலாரில் மாபெரும் வேலைநிறுத்தம்

20 ஆயிரம் தொழிலாளர்களின் வீரப்போர்

தமிழ்நாட்டு மக்களே! ஆதரவு கொடுங்கள்!

கோலார் தங்கச் சுரங்கங்கள் பிரளயகால வேகத்துடன் குமுறி விட்டன. பொறுத்தது போதுமென்று போர்க் கொடி தூக்கி விட்டார்கள் 20 ஆயிரம் தொழிலாளிகள். நம்முடைய போராட்ட கோஷம் வானைக் கிழித்துச் சென்றால்மட்டும் போதாது—ஒன்பதாயிரம் அடி பாதாளக் குழியில வேலை செய்யும இரவு வேலை தொழிலாளர்களுக்கும் கேட்கும்படி பூமியையும் பிளந்து செல்லும்படியாக நமது கோஷம் அதிரவேண்டும் என்றான் ஒரு இளம் போர்வீரன். தொழிலாளியின் வருங்கால நம்பிக்கை!

செழிப்பு மிகுந்த எதிர்காலத்தைச் சிருஷ்டிப்பதற்காக தொழிலாளிவர்க்கம் புது வருஷத்தில் போர்க் கொடி உயர்த்தியுள்ளது. தொழிலாளர்களுடைய போருணர்ச்சி உச்சஸ்தையில் இருக்கிறது. தொழிற்சங்க விசுவாசம் பரிபூரணமாக இருக்கிறது. ஒற்றுமையும் கட்டுப்பாடும் ஒழுங்கும் ஆச்சரியப்படத் தக்கவாறு இருக்கிறது. தொழிற்சங்க ஆணைக்கு உட்பட்டு எத்தகைய தியாகத்தையும் செய்வதற்குத் தயார் என்று வீறுகொண்டு மார் தட்டுகிறார்கள்.

சுரங்க மானேஜ்மெண்டின் பேராசை வெறி சிறிதளவாவது தணியுமென்று தொழிலாளிகள் எதிர்பார்த்தார்கள்; தணிந்தபாடில்லை. மைசூர் மன்னரின் ராமராஜ்யமாவது இதில் தலையிட்டு தொழிலாளி மக்களின் துன்பத்தைக் குறைப்பார்கள் என்று எதிர்பார்த்தார்கள் தொழிலாளர்கள். அதற்குப் பதில் அரசாங்கத்தின் உயிரற்ற போக்கும், முதலாளிகளின் இருதயமற்ற பிடிவாதமும் தொழிலாளிகளின் நம்பிக்கையைப் பாழ்படுத்தின. கடந்த எட்டு மாத காலமாக தொழிற்சங்கம் மானேஜ்மெண்டுடன் கடிதப் போக்குவரத்து நடத்தியது—பேசிப் பார்த்தது—தூது சென்றது—சமரசம் பேசியது. பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் யாவும் நடத்தியாய்விட்டது. மைசூர் லேபர் சட்டப்படி என்னென்ன வழிகளுண்டோ அத்தனை வழிகளையும் கையாண்டு பார்த்தாய் விட்டது.

9 ஆயிரம் அடி பாதாளத்தில் வேலை செய்யும் தொழிலாளி 9 அணா கூலியை வாங்கிக்கொண்டு எத்தனை நாள் பட்டினி கிடக்க முடியும்? சுரங்கத்திற்கு வெளியில் வேலை செய்யும் பையன்களும் பெண்களும் ஆண்களும் 7 அணா கூலி வாங்கி எப்படி வயிறு வளர்க்க முடியும்? மனிதனாக வாழ்வதற்கு போதுமான கூலியில்லாமல் எத்தனை காலம்வரையும் பொறுத்து மடிந்துகொண்டிருக்க முடியும்?

இறுதிவரை போராடுவோம்

முந்திய போராட்டம் நடந்து எட்டு மாதங்கள்கூட ஆகவில்லை. சென்ற போராட்டத்தில் ஏற்பட்ட கடன் இன்னும் அடைபடவில்லை. அதற்குள் மீண்டுமொரு போராட்டத்தை சுரங்க அதிகாரிகள் ஏற்படுத்தி விட்டார்.

முதலாளிகளின் மூர்க்க புத்தியையும் அரசாங்கத்தின் பராமுகப் போக்கையும் கண்டபின் தொழிலாளிகளுக்கு வேறு வழியில்லை. அந்தந்த தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தப் போருக்குத் தயாராகும்படி தொழிலாளிகளை அறைகூவின. மைசூர் லேபர் கமிஷனர் வேலை நிறுத்த பாலட் எடுக்க வசதிகள் செய்துதந்தார். ஓட் போட்டவர்கள் மொத்தம் 10,200. அதில் 7 பேரைத் தவிர மற்றவர்கள் யாவரும் வேலை நிறுத்தத்திற்கு சாதகமாக வோட் போட்டனர். வோட் இல்லாதவர்களையும், வோட் போடாதவர்களையும் பொதுக்கூட்டம் கூட்டி கை தூக்குவதன்மூலம் சம்மதம் கேட்டனர் தொழிற்சங்க நிர்வாகிகள். அத்தனை பேருடைய கரங்களும் என்றும் கண்டிராத உற்சாகத்துடன் உயர்ந்தன. பாலட் எடுக்கப்பட்ட 4 தினங்களிலும் 4 சுரங்கங்களிலும் சராசரி எட்டாயிரம் தொழிலாளிகள் கூடினர்.

தண்ணீர் சப்ளை, ஆஸ்பத்திரி, சுகாதாரம் ஆகியவற்றில் ஈடுபட்டிருக்கும் சுமார் 1000 தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள். அவர்களது வேலையின் முக்கியத்வத்தை உணர்த்தி, அதனால் ஏற்படும் விளைவுகள் தொழிலாளர்களையே பாதிக்கும் என்பதை தொழிற் சங்கத் தலைவர்கள் எடுத்துரைத்ததும் அத்தனை பேர்களையும் சங்கம் வேலைக்கு அனுப்பிற்று.



வேலைநிறுத்த பாலெட்டில் கலந்துகொள்ள முடியாமற்போனவர்களும், தாங்கள் போராட்டத்துக்குத் தயார் என்பதை கை தூக்குவதன் மூலம் தொழிற்சங்கத்திற்கு உறுதி கூறினார்கள். பல்லாயிரக் கணக்கான கரங்கள் உற்சாகமுடன் உயர்ந்தன.

வேலை நிறுத்த பேலட் அமைதியாக நடக்குமா என பலர் சந்தேகித்தார்கள். திறமையும் ஒழுங்கும் படைத்த நூற்றுக் கணக்கான செந்தொண்டர்களும், தொழிலாளர்களின் இருதய அன்புக்குப் பாத்திரமான தலைவர்களும் கோலாரில் இதுவரை கண்டிராத அமைதியையும் ஒழுங்கையும் நிலை நாட்டினார்கள். இதைக் கண்ட அரசாங்க அதிகாரிகள்கூட வியந்து பாராட்டினார்கள்.

கோரிக்கைகள் நியாயமானது

அவர்களது முதல் கோரிக்கை: **ஒவ்வொரு ரகத் தொழிலுக்கும் ஆரம்பக் கூலியும், முடிவான கூலியும் என்ன என்பதை நிர்ணயிக்கவேண்டும் என்பது.** அப்படியானால்தான் தங்களது குடும்பத்தையும் எதிர்காலத்தையும் எந்த அளவுக்கு விருத்தி செய்து கொள்ளலா மென்று தெரியும்.

அடுத்தபடியாக, ஒவ்வொரு தொழிலிலும் சர்வீஸ், வேலை கஷ்டம், திறமை ஆகியவற்றை அனுசரித்து கூலிஉயர்வு கொடுக்கவேண்டும். அதே போல், கிரேடுகளை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளவேண்டும்.

வேலை நிறுத்தம் தொடங்க நாலு தினங்களுக்கு முன் “வேலை நிலைமையில் சில அபிவிருத்திகள்” செய்யப் போவதாக சுரங்க கம்பெனியார் பசப்பலானார்கள். சுரங்கத்திற்குள் வேலை செய்பவர்களுக்கு 13 அணாவுக்கு கீழாகவும், மேலே வேலைசெய்பவர்களுக்கு 11 அணாவுக்கு கீழாகவும் இராது என்றனர். பிராவிடண்ட் பண்டு, குறிப்பிட்ட வருட சர்வீஸுக்கு அப்புறம் ராஜிநாமா செய்ய உரிமை, ஓவர்டைம் கூலி விகிதம் முதலியவற்றில் சில சலுகைகள் தருவதாகவும் கூறினர். இதன் விபரங்களை இன்னும் வெளியிடவில்லை.

சில்லரை சலுகைகளைத் தந்துவிட்டால் ஜீவாதாரமான கூலி நிர்ணய விஷயத்தை மழுப்பி விடலாமென கம்பெனியார் நினைத்தார்கள். இதை எதிர்த்துதான் தொழிலாளர்கள் போரில் ஈடுபட வேண்டியதாயிற்று.

போராட்டம் வலுக்கும்

உடனடியாக இவ் விஷயத்தில் சர்க்கார் தலையிட்டு, மானேஜ்மெண்டைத் தைரியமுடன் நிர்ப்பந்தித்து தொழிலாளர்களின் கோரிக்கைகளை பூர்த்தி செய்ய வேண்டும். தாமதம் செய்வதால் ஏற்படும் விளைவுகளுக்கு சர்க்காரும் மானேஜ்மெண்டுமே பொறுப்பாளிகளாவார்கள்.


இந்த தொழிலில் ஆரம்பத்தில் எவ்வளவு மூலதனம் போடப்பட்டதோ அதைப்போல 63 மடங்கு செல்வம், கம்பனியார் எடுத்தாய் விட்டது. டிவிடெண்டுகளாக மட்டும் மூலதனத்தைப்போல் 19 மடங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இத்தொழில்மூலம் வருஷத்திற்கு சுமார் 2 கோடி ரூபாய் வரியாக சர்க்காருக்கு கிடைக்கிறது. மைசூர் ராஜ்யத்தின் செல்வ அபிவிருத்திக்கு உயிர், மூச்சு போன்றவர்கள் கோலார் தொழிலாளிகள். அவர்களைப் பட்டினி போடுவது மைசூரின் நல்வாழ்வையே சீர்குலைப்பதாகும்.

தமிழ்நாட்டுப் பொது மக்களே!

தேச சுபிட்சத்திற்காக கோலார் தொழிலாளிகள் போராக்னியில் குதித்திருக்கிறார்கள். அவர்களில் ஏறக்குறைய எல்லோரும், இன்றைய சமூகத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் என்று கூறப்படுகிற அதே வகுப்பை சேர்ந்தவர்கள்தான். அவர்கள் யாருக்கும், எதற்கும் அஞ்சாத வீரசிம்மங்கள். நியாயத்தை நிலைநாட்ட மரணத்தையும் திரணமாக மதிக்கும் மஹா வீரர்கள்.

கோலாரிலுள்ள அத்தனை ரிக்ஷா தொழிலாளிகளும், வர்த்தகர்களும், பள்ளி மாணவர்களும் மற்றும் பலரும், சங்கங்களின் கூட்டுக் கமிட்டி உத்திரவிட்டால் தாங்களும் ஹர்த்தால் செய்யத் தயாராக உள்ளார்கள். மதுரையில் கூடிய மாகாண தொழிற்சங்க மகாநாட்டில் கோலார் தொழிலாளிகளுக்கு ஆதரவளிப்பதாக உறுதி கூறினோம். கோலார் தொழிலாளிகளில் 99 சத வீதம் தமிழர்கள். நமது சொந்த சகோதரர்கள். அவர்கள் பட்டினி கிடப்பதை அனுமதிக்கப் போகிறோமா அல்லது அவர்கள் வெற்றி யடையுமாறு கிளர்ச்சிக் கொடி தூக்கப் போகிறோமா?

வேலைநிறுத்த பாலெட் அமைதியுடன் நடைபெறுமா என்று சந்தேகித்தனர் அதிகாரிகள். ஆனால் அவர்களும் திகைத்து நிற்கும்படியாக செந்தொண்டர்கள் அமைதியைப் பாதுகாத்தனர். இவர்கள்தான் தொழிலாளர்களின் முன்னணிப் பட்டாளம்.



சாம்பியன் ரீப் சுரங்கத் தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் பாலெட் எடுக்கும்போது, அதிகாரிகளும் கூடவேயிருந்து செந்தொண்டர்கள் கொடுத்த புகாரை பரிசீலனை செய்கிறார்கள்.

கண்டிராத எழுச்சி!

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

கிளர்ச்சியின் வேர்

ஒரு குதிரை வண்டிக்கு ஆகும் செலவு—கொள்ளு, புல் கட்டு, கூலி, வாடகை, தேய்மானம் முதலியவற்றிற்கு ஒரு நாளைக்குச் செலவு ரூ. 5 ஆகிறது. டவுன் பஸ்களை அதிகப்படுத்தியதன் காரணமாக 3 ரூபாய் தான் வாடகை கிடைக்கிறது. பல வண்டிகள் வாடகையின்றி ஸ்டாண்டிலேயே நிற்க வேண்டி ஏற்பட்டது. புதிய பஸ்கள் விடுவதைக் குறித்து, எவ்வித முன்னறிவிப்பும் இல்லை.

இதை எதிர்த்துத்தான் மதுரை செண்ட்ரல் பஸ் ஸ்டாண்டை அடுத்தக் கவாத்து மைதானத்திலிருந்து கலெக்டர் பங்களாவுக்கு அருகிலுள்ள பீப்பிள்ஸ் பார்க் மைதானத்திற்கு 3 மைல் நீள ஊர்வலம் நகர்ந்தது. இதை ஒரு லக்ஷம் பேருக்கு மேல் கண்டு களித்தார்கள்.

சங்கத்தலைவர் முத்துராக்கு கோனாரும், காரியதரிசி எம். என். ஆதி நாராயணனும் கலெக்டரை பேட்டி கண்டார்கள். இது விஷயத்தில் ...யிட்டு வேண்டியதைச் செய்வ... வாக்களித்தார். இதன் பின் ... பிள்ஸ் பார்க்கில் பொதுக் கூட்... நடந்தது. வண்டிகள் அணிவகு... நிறுத்தப்பட்டன. தோழர் மு... ராக்கு கோனார் தலைமை வகித்... தோழர்கள்: ஆதி, எம். ஆர். ... மணி முதலியவர்கள் பேசினார்... குதிரை வண்டித் தொழிலாளர் ... கத்துடன் மாட்டு வண்டிகளை ... ரிக்ஷா வண்டிகளையும் சேர்... கொள்ளுவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டம் முடிந்தபின், டிரா... சூப்ரண்டெண்டை தோழர்க... கே. டி. கே. தங்கமணி, பால... திரமேனன், ஆதிநாராயணன் மு... யவர்கள் சந்தித்துப் பேசினார்க... தொழிலாளர்களின் கோ...க்கைகளைக் கவனிப்பதாக வாக்கள...திருக்கிறார்.

ஊர்வலம் எவ்வித தகராறுமின்... நடைபெற்றதைக் கண்டு அதிக... களும் பொதுமக்களும் செந்தொ...டர்களைப் பாராட்டினார்கள்.

'எக்ஸ்பர்ட்' இல்லாமலே பென்சில் செய்கின்றனர்!

தொழிலாளிகளுக்கு என்ன தெரியும்? காலேஜைக் கண்டிருக்கிறார்களா? ரஸாயன சாஸ்திரம் தெரியுமா? யந்திர நுணுக்கம் தெரியுமா? அது தெரியுமா? இது தெரியுமா?—என்றெல்லாம் தொழிலாளிகளின் சிருஷ்டி சக்தி எத்தகையது என்பதை உணராத பலர் அலக்ஷியமாகப் பேசுவதுண்டு.

ஆனால் தொழிலாளிகளுக்கு தக்க சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டால் எத்தகைய அற்புத நுணுக்கங்களையும் செய்யமுடியுமென்பதை சென்னை (ஷோ. அண் கோ) பென்ஸில் பாக்டரி தொழிலாளிகள் காட்டிவிட்டார்கள். மாதம் 1200 ரூபாய் வாங்கிக் கொண்டிருந்த ஒரு ஜெர்மன் நிபுணனின் வேலையை, சாதாரண தொழிலாளிகளே செய்துவருகிறார்கள்.

நாம் உபயோகப்படுத்தும் காப்பியிங், டிராயிங், ஊதா, சிகப்பு முதலிய பல்வேறு ரக பென்ஸில்களைச் செய்வதில் திறமைசாலிகள் சென்னை பென்ஸில் பாக்டரி தொழிலாளிகள்; செங்கொடியின் கீழ் அவர்களுக்கு வலிமை மிக்க சங்கமிருக்கிறது. இதை உடைக்க எவ்வளவோ பிரம்மப்பிரயத்தினங்கள் செய்யப்பட்டன. சங்கக் காரியதரிசி தோழர் ஆர். எம். துரைக்கண்ணு பாதுகாப்புக் கைதியாக வைக்கப்பட்டார். இதுதான் சமயமென்று சீர்குலைவுக்காரர்கள் தம் சுயநலனை பூர்த்திசெய்துகொள்ள பல மோசடி வேலைகளில் ஈடுபட்டனர். காரியதரிசி சிறையிலிருந்து வெளிவந்ததும், சுயநலமிகள் இருந்தவிடம் தெரியவில்லை.

தொழிலாளிகள் ஒழுங்கு, கட்டுப்பாடு, திறமை ஆகியவற்றில் தலைசிறந்து விளங்கினர். இதைக்கண்டு எரிச்சல் கொண்ட ஜேகப் ஆமன் என்ற ஜெர்மன் நிபுணன் சங்கத்தை உடைக்கவும், பிளவுபடுத்தவும் முனைந்தான். தொழிலாளிகளைக் கண்டபடி திட்டினான். குடித்துவிட்டு வந்து தொழிற்சாலைக்குள் கலாட்டா பண்ணவும் ஆரம்பித்தான். சகல சூழ்ச்சிகளையும் செய்து தலைகீழாக நின்றான். அடாத காரியம் செய்தவர் படாதபாடுபடுவர் என்று அவனுக்குத் தெரியவில்லை.

இந்த எக்ஸ்பெர்ட்டுக்கு சம்பளம் மாதம் 1200 ரூபாய். இவனுடைய வேலை பென்ஸில்களுக்கு வேண்டிய மையை பக்குவமானபடி கலப்பது. தன்னைத் தவிர வேறு யாருக்கும் இத்தொழில் தெரியாது என்ற கர்வத்தினால்தான் தன்னிஷ்டம்போல் தொழிலாளிகளிடம் வாலை நீட்டி வந்தான்.

வால் அறுபட்டது

சம்பளம் அதிகம் வாங்கினால் தலைகால் தெரியாமல் ஆட்டம் போடலாமென்ற தத்துவத்திற்கு சவக்குழி தோண்டத் தீர்மானித்தார்கள் தொழிலாளிகள். இந்த கோபுரபொம்மை இல்லாமலே கோபுரம் நிற்குமென்று கூறினார்கள். "இந்த ஜேகப் ஆமனுக்கு கல்தா கொடு, அவன் செய்த வேலையைவிட அருமையான வேலையை நாங்கள் செய்துகாட்டுகிறோம்" என்று சங்க மூலமாக நிர்வாகத்திற்கு எழுதினார்கள். கிளர்ச்சி வலுத்தது. நிர்வாகமும் பணிந்தது. லெட் கூட்டும் ஜெர்மன் நிபுணன் ஜேகப் ஆமனுக்கு கல்தா கிடைத்தது. தொழிலாளர்கள் மகத்தான வெற்றி பெற்றார்கள்.

தொழிலாளிகளே! உங்கள் திறமையைக் காட்டுங்கள் என்று சங்கம் கட்டளையிட்டது. தொழிலாளிகளிடம் பொறுப்பு வந்தது, இஷ்டப்படி திறமையைக்காட்ட சந்தர்ப்பம் வந்தது. லெட் டிபார்ட்மெண்டில் 20 ரூபாய் சம்பளம் வாங்கி வந்த தொழிலாளி பொன்னுசாமி, 1200ரூபாயை மாதாமாதம் விழுங்கி வந்த எக்ஸ்பெர்ட்டைவிட அதிக பக்குவமான லெட் தயாரிக்கிறார். கலரிங் வார்னிஷ் டிபார்ட்மெண்டில் வேலை செய்யும் ராஜாபாதர் என்ற தொழிலாளி, முன்பு செய்து வந்த ஒரு கலரை விட்டுவிட்டு, பல படிகள் முன்னேறி கண்ணைக் கவரும் வர்ணங்களை யுடைய பலவிதமான பென்ஸில்களைத் தயாரிக்கிறார். இம்மாதிரியே சகல தொழிலாளர்களும் திறமையில் தேர்கிறார்கள். இன்னும் எவ்வளவு மகிமைகளைச் செய்வார்களோ!

பிராவிடெண்பண்டு வேண்டும், சம்பளம் உயரணும், கிராஜுடி வேண்டும் என தொழிலாளர்கள் கிளர்ச்சி செய்கிறார்கள். முன்போலவே இதிலும் வெற்றி யடைவார்கள்.

[சங்கத் தலைவர், சையத் யாகூப்.]

கோவையில்

திரும்பவும்—பிளேக்

கடந்த இரண்டு வருடங்களைப்போலவே இவ்வருடமும் கொடூரமான பிளேக் நோய் கோவையில் பரவுகிறது. தொழிலாளர் வசிக்கும் பிரதேசங்களில்மட்டுமல்ல; மத்தியதர வர்க்கத்தார் வசிக்கும் இடங்களிலும் பிளேக் பரவுகிறது. காளீஸ்வரர், ஸ்டேன்ஸ் மில்களிலும் எலிகள் விழுகின்றன.

உடனடியாக இது விஷயத்தில் கோவை பொதுஜனங்களும், அரசியல் கட்சிகளும், முனிஸிபாலிடியும், சர்க்காரும் பிளேக்கைத் தடுக்க முன்வரவேண்டும். நிவாரண நிதி திரட்டுவதிலும், வைத்திய வசதி, வீட்டு வசதிகளைச் செய்வதிலும் முனைய வேண்டும்.

முன்னைய வருடங்களில் ஏற்பட்ட பிளேக் வியாதி கோவை டவுனில்தான் இருந்தது. அப்பொழுது டவுனைவிட்டு பக்கத்து கிராமங்களில் உள்ள தம் சொந்தக்காரர்களின் வீட்டுக்குப் போய்விட வசதியிருந்தது. ஆனால் இப்பொழுதோ டவுனிலும் சுற்றுப்புற கிராமங்களிலும் நோய் பரவிக்கொண்டிருக்கிறது.

கிராமவாசிகளைச் சந்தித்தால், "உங்களூரில் மழை எப்படி? வெள்ளாமை எப்படி?" என்று கேட்பது வழக்கம். ஆனால் இன்று, "உங்களூரில் பிளேக் எப்படி? அம்மை எப்படி? காலரா எப்படி?" என்றுதான் க்ஷேமம் (?) விசாரிக்கவேண்டியிருக்கிறது. வியாதி ஆரம்பித்த ஒரு மாதத்திற்குள் வியாதி கண்டவர்களில் பாதிக்கு மேல் மடிந்துவிட்டார்கள். 10-12-45ல் வெளிவந்த கோவை முனிசிபல் ரிப்போர்ட்படி 146 பேர்களுக்கு பிளேக் பிடித்ததில் 62 பேர் இறந்துவிட்டனர்! அந்தந்த ஸ்தலங்களுக்குச் சென்று விசாரித்தால் எண்ணிக்கை இன்னுமதிகமாகிறது.

முனிசிபல் முயற்சி போதாது

முனிசிபாலிடியார் வீடுகளைப் பிய்க்கிறார்கள்; இனகுலேஷன் செய்கிறார்கள்; புகை போடுகிறார்கள். ஆனால் வியாதியின் தீவிரத்திற்குத் தக்கபடி வேலை துரிதமாகவில்லை. போதுமான ஆஸ்பத்திரிகள் இல்லை. முரட்டு ஊசிகளை உபயோகிப்பதால் ஜனங்கள் பயந்துபோய்விடுகிறார்கள். ஜனங்களிடம் சௌஜன்யமாக அதிகாரிகள் நடந்துகொள்ளுவதும் அதிகமில்லை.

கிராம நிலையோ மிகவும் பயங்கரமானது. குடியிருந்த குடிசையை விட்டால், தங்குவதற்கு வேறு இடம் இல்லை. பச்சிளங் குழந்தைகளுடன் தாய்மார்களும் முதியோர்களும் வெட்ட வெளியில் கொட்டும் பனியில் நடுங்கிக்கொண்டிருப்பதைப் பார்க்கவே கண்ருவியாயிருக்கிறது.

இன்னும் சிலவிடங்களில் தஞ்சம் புகவேறிடமில்லாததால் எலிவிழுந்த வீட்டின் திண்ணையிலேயே வாசம் செய்கிறார்கள். இந்த நிலையில் அம்மை வியாதி வேறு வந்து ஆட்களை பலி கொண்டுபோகிறது.

கம்யூனிஸ்ட் கட்சி முன்வந்தது

பாஸிசத்தையும், ஏகாதிபத்தியத்தையும், முதலாளித்வத்தையும், முதலாளிகளின் கைக்கூலிகளையும் எதிர்த்துப் போராடியதுபோலவே ஜனங்களை வாரிக்கொண்டுபோகும் இந்த பிளேக் நோயையும் எதிர்த்துப் போரிட கோவை ஜில்லா கம்யூனிஸ்ட் கட்சி முன்வந்தது. முன்பு பிளேக் வந்த காலத்தும் இவ்விதமே போராடியது.

இந்நிலையில் கட்சியின் சார்பாக பிளேக்கின் அபாயத்தை உணர்த்தி ஆயிரக்கணக்கில் நோட்டீஸ்கள் வெளியிடப்பட்டன. நிலைமையை விளக்கிக் கூட்டங்கள் போடப்படுகின்றன.

பொதுமக்களின் கடமை

எலி விழுந்தவுடன் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தவேண்டும். செத்து விழுந்த எலியின் மீது உடனே மண்ணெண்ணை ஊற்றி கொளுத்துங்கள். ஆரம்பத்திலேயே ஆஸ்பத்திரிக்குப் போங்கள். பண வசதியுள்ளவர்கள் "ஸெபஸில்" என்ற குளிகையை வாங்கி சாப்பிடுங்கள். கட்டி வந்த இடத்தில் "பெல்டோனு" மருந்தை தடவுங்கள். வியாதி வந்தவர்களும், வராதவர்களும் உடனே ஊசி குத்திக்கொள்ளுங்கள். கம்யூனிஸ்ட் கட்சி ஆபிஸிற்கு வந்து தெரிவியுங்கள். உடனே வேண்டியதைச் செய்வார்கள்.

முனிஸிபாலிடியின் கடமை

இந் நிலைமையின் காரணத்தை சுகாதார இலாகா ஆராய்ச்சி செய்ததாகத் தெரியவில்லை. இதன் அடிப்படைக் காரணத்தைப் போக்க முயற்சி எடுத்ததாகவும் தெரியவில்லை, வியாதியின் வேகத்திற்குத் தக்கவாறு நிவாரணம் செய்யவில்லை. ஜனங்களின் சேவகர்கள் என்பதை உணர்ந்து சுகாதார அதிகாரிகள் சௌஜன்யமாக நடந்துகொள்ளவேண்டும். சுத்தம் செய்யப்பட்ட ஊசி போடவேண்டும். பெண்களுக்கு—குறிப்பாக முகம்மதியப் பெண்களுக்கு—ஊசி குத்த பெண் உத்தியோகஸ்தர்களை நியமிக்கவேண்டும். பிளேக் பரவியுள்ள வார்டு பூராவும் புகையடிக்க வேண்டும். பிளேக் நோய்க்கென பிரத்தியேக ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்த வேண்டும்.

அரசியல் கட்சிகள் ஒன்றுபடுக!

செத்து மடிந்துகொண்டிருக்கும் நமது தாய் தந்தையர்களுக்கு உடனடியாக தொண்டுபுரிவதே அரசியல் கட்சிகளின் கடமை. அரசியல் கட்சிகள் கூட்டு முறையில் வேலை செய்யாததால்தான் மரண எண்ணிக்கை அதிகமாகிறது.

தற்காலிக கூடாரங்கள் ஏற்படுத்தவும், மருந்து வசதி, நிவாரணவசதி ஏற்படுத்தவும் எவ்வித வேறுபாடுமில்லாமல் சகல கட்சிகளும், சங்கங்களும் நிதி திரட்ட முன்வரவேண்டும். சர்க்கார் உடனே தலையிட்டு ஏராளமான பொருளுதவி செய்ய வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சி தனது முழு சக்தியையும் கொண்டு இவ் வியாதியை எதிர்க்க சகலருடனும் ஒத்துழைக்கத் தயார்!

மதுரையில்

என்றுமே கண்டிராத எழுச்சி!

குதிரைவண்டி—மாட்டுவண்டி—ரிக்ஷாவண்டிகளின் மூன்று மைல் நீள ஊர்வலம்

இது 1946-ம் வருடம்! தொழிலாளிவர்க்கம் தன் அணியை சரிப்படுத்தி, தம் குறைகளைத் தீர்க்க முஷ்டி தூக்கும் வருடம்!! தன் வண்டியையும், குதிரையையும், மாட்டையும் தவிர உலகத்தைப்பற்றி வேறு எதுவுமே தெரியாத தொழிலாளர்கள், செங்கொடியின் கீழ் அணிவகுத்து நின்று, தம் துன்ப வாழ்க்கையின் சமூக காரணங்கள் என்னவென்பதைப்பற்றி அரசியல் ரீதியில் பரிசீலனை செய்யும் புது வருடமிது!!!

இதுவரை டவுன் பஸ்கள் ஓடாத வீதிகளிலும் டவுன் பஸ் விடப்படுவதை எதிர்த்து ஒரே நாள் நோட்டீஸில் 500 வண்டிகளுடைய 3 மைல் நீள ஊர்வலம் மதுரையில் நடைபெற்றது. பர்லாங்குக்கு இரண்டு செங்கொடிகள் வீதம் 3 மைல் தூரமும் அற்புதக் காட்சியா யிருந்தது. ஊர்வலத்தில் குதிரை வண்டிகள், மாட்டு வண்டிகள், ரிக்ஷா வண்டிகள், அதற்குப்பின் உற்சாக மிக்க மாணவர்கள், தொழிலாளிகள் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டனர். ஊர்வலத்தின் தலையும், வாலும் பார்க்க 2 மணி நேரம் பிடித்தது.

வண்டித் தொழிலாளர்களில் இந்துக்கள் பாதிப்பேர், முஸ்லிம்கள் பாதிப்பேர். இவர்களின் ஒன்றுபட்ட கோரிக்கையை யாராலும் எதிர்க்க முடியாது என்பதை மதுரையில் நடைபெற்ற மகத்தான ஆர்ப்பாட்டம் எடுத்துக் காட்டியது.

அதிகாரிகள் திகைத்து நின்றார்கள். பொது மக்கள் பேராச்சரியத்துடன் ஸ்தம்பித்து நின்றார்கள். தாய்மார்கள் வாழ்த்தினார்கள். தொழிளாளி வர்க்கத்தின் பகைவர்கள் கிடுகிடுவென நடுங்கினார்கள்.

டிராபிக் போக்கு வரத்தை மக்களின் செஞ்சேனை திறமையாக சமாளித்தார்கள். செந்தொண்டர்களின் மெகாபோன் கோஷம் பொது மக்களுக்கு புத்துணர்ச்சியைக் கொடுத்தது,

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு முதல் நாள் 6-1-46-ல் நடந்த பொதுக் கூட்டத்தில் சிதம்பர பாரதி பேசுகையில், "ஐந்தாறு ஜட்கா வண்டிக்காரர்களை வைத்துக்கொண்டு கம்யூனிஸ்டுகள் ஜம்பமடிக்கிறார்கள்" என்று பேசினார். அடுத்த நாள் ஆர்ப்பாட்ட தினத்தில் சிதம்பர பாரதி மதுரையிலேயே இல்லை. ஒரு வேளை அவசர ஜோலிக்காக குற்றாலம் போனாரோ என்னவோ!

குதிரை வண்டித் தொழிலாளர் சங்கத்தில் பறந்து கொண்டிருந்த செங்கொடியை இறக்கிய கும்பலுக்கு தலைமைதாங்கி வருபவர்தான் இந்த மகானுபாவர்.

(5-ம் பக்கம் பார்க்க)

வண்டிகளெல்லாம் பின்னால் நிற்கின்றன. தொழிலாளர் கூட்டத்தில் ஒரு பகுதி.

சென்னை

ஸ்பென்ஸரில் ஸ்ட்ரைக் பாலெட்

சென்ற ஒரு வருட காலமாக சென்னை ஸ்பென்ஸர் தொழிலாளிகள் முதலாளியிடம் தங்கள் குறைகளை முறையிட்டுப் பார்த்தார்கள். லேபர் கமிஷனருக்கும் மனுச் செய்தார்கள். மீண்டும் ஞாபகப்படுத்தி மனு எழுதினார்கள். அதிகாரிகளை பேட்டி கண்டார்கள். முதலாளியோ அதிகார வர்க்கமோ இம்மியும் நகர்ந்து கொடுக்க மறுத்துவிட்டது. சகல சமரச முயற்சிகளும் வியர்த்தமாயிற்று.

போராட்டத்திற்கு தயாராகாவிட்டால் பட்டினிக்கும் பழிவாங்கலுக்கும் ஆளாக நேரிடுமென்பதை தொழிலாளர்கள் உணர்ந்தனர். ராயப்பேட்டையில் நடைபெற்ற 4-1-46 பொதுக் கூட்டத்தில் 700 பேர் திரண்டனர். தோழர்கள் ஜீவா, சங்க காரியதரிசி சிண்டன், டிராம்வே தொழிற்சங்க காரியதரிசி சோமசுந்தரம் முதலியவர்கள் பேசினார்கள். வேலை நிறுத்த பாலட் எடுக்கப் போவதாக தொழிலாளர்கள் தீர்மானித்தார்கள்.

முதலாளியின் திமிரான பதில்

சென்னை வாழ்க்கைக்கு 12ரூபாய் பஞ்சப்படி போதாது. 16 ரூபாயாவது வேண்டுமென்று கேட்டால், "சர்க்கார் கண்ட்ரோல் இருப்பதால் லாபம் கிடைக்கவில்லை" என்று முதலாளி கூறுகிறார். வெளியில் விற்கும் விலையைவிட பல மடங்கு விலை வைத்து ஸ்பென்ஸரில் விற்கப்படுகிறது என்பது அனைவருக்கும் தெரியும். அது மட்டுமா? கூலி உயர்வு கொடுக்கக்கூடிய அளவுக்கு தொழிலாளிகளுக்கு திறமை போதாது" என்றும் கூறுகிறார். மூர்க்கத்தனம் இத்துடன் நிற்கவில்லை. "ஒவ்வொரு டிபார்ட்மெண்டுக்கும் ஒவ்வொரு சங்கம் அமைக்க வேண்டும். அதுவும் மாகாண ரீதியில் அமைக்கவேண்டும். அந்தச் சங்கத்தில் வேலைக்காரர்களும் முதலாளிகளும் சேர்ந்திருக்க வேண்டும்" என்று கிண்டல் செய்கிறார்.

இவரது தர்பாரில் ஒருநாள் ஆப்ஸண்ட் ஆனால் 14 நாள் சஸ்பென்ஸன் கிடைக்கும். தேர் திருவிழா என்றால் லீவ் கிடைப்பது கஷ்டம். கிடைப்பினும் அரை நாள் லீவ்தான்.

தொழிலாளர்கள் நூற்றுக்கு நூறு சங்கத்தில் இருக்கிறார்கள். சோடா பாக்டரி, பேக்கரி, லாண்டரி, ஹவுஸ் பர்னிஷிங், ஒர்க்ஷாப், ஸ்பென்ஸர் ஹோட்டல், கன்னிமாரா ஹோட்டல் முதலியவற்றில் வேலை செய்யும் தொழிலாளர்களும் கிளர்க்குகள், ரைட்டர்கள் முதலிய அனைவரும் சிவப்புக் கொடியின்கீழ் அணிவகுத்திருக்கிறார்கள்.

இவர்களில் பெரும்பாலும் ஆதிதிராவிடர்கள். எவ்வளவு குறைந்த சம்பளம் கொடுத்தாலும் வாய் பேசாமல் வாங்கிக் கொள்ளுவார்கள் என்ற எண்ணம்தான் முதலாளிக்கு இருக்கிறது. போலும்! காலம் மலையேறி விட்டது. என்றைக்குமில்லாத விழிப்பு ஆதிதிராவிட மக்களிடையே ஏற்பட்டிருக்கிறதென்பதை உணர்ந்து தொழிலாளிகளின் குறைகளைத் தீர்க்க உடனே முன்வர வேண்டும். லேபர் அதிகாரிகளும் தம் தூக்கத்தை சிறிது ஒத்தி வைத்துவிட்டு இவ்விஷயத்தில் உடனே தலையிட்டு நீதி வழங்கவேண்டும்.

மலேயா

பழய சுரண்டல் ஆட்சியை ஏற்கமாட்டோம்!

சிங்கப்பூரில் மாபெரும் கிளர்ச்சி

ஜனவரி மாதம் முதல் தேதியன்று சிங்கப்பூரில் ஒரு பிரம்மாண்டமான அரசியல் ஆர்ப்பாட்டமும், பொதுக் கூட்டமும் நடைபெற்றது. புதிதாக ஸ்தாபித்துள்ள "மலேயா ஜன நாயகச் சங்கம்", மலேயா கம்யூனிஸ்டு கட்சி, மலேயா தேசீயக் கட்சி, இந்தோனேஷியா ஜனநாயக லீக் முதலிய பல கட்சிகளும், பல தேசிய இனங்களும் பங்கெடுத்துக் கொண்டன. 50000க்குமேல் பொதுமக்கள் விஜயஞ் செய்திருந்தார்கள்.

இந்தோனேஷியா, இந்தோசைனா முதலிய நாடுகளில் சுதந்திர இயக்கங்களை ஏகாதிபத்தியங்கள் நசுக்கிவருவதைக் கண்டித்து ஏகமனதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பிரெஞ்சு, டச்சு, ஏகாதிபத்தியங்கள் ஒழிக—இந்தியாவுக்கு சுதந்தரம் கொடு—ஏகாதிபத்தியப் படைகளை வாபஸ் வாங்கு—ஜனநாயக சுதந்திரக் குடியரசு வேண்டும்—என்பனபோன்ற சுலோகங்கள் பொறிக்கப்பட்ட அட்டைகளை ஆர்ப்பாட்டம் செய்த சுதந்திரப் பிரியர்கள் ஊர்வலத்தில் எடுத்துச் சென்றனர்.

மலேயாவில் சுதந்திரம், ஜனநாயகம் என்ற சண்டமாருதம் வீசியடிக்கிறது. மக்கள் அரசியல் விழிப்புற்று, கிளர்ந்தெழுந்துள்ளார்கள்.

ஜப்பானிய ஆக்கிரமிப்பிற்கு முன்பு, மலேயாவில் ஜனநாயகம் இம்மியளவேனும் கிடையாது. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் ஸ்தாபனங்கள் ஒன்றுகூடக் கிடையாது. ஈயச் சுரங்க முதலாளிகளும், ரப்பர் தோட்ட முதலாளிகளும், அதிகாரவர்க்கமும் 60 லட்சம் மக்கள்மீது ஆதிக்கம் செலுத்தி வந்தனர். பெயரளவில் சமஸ்தான சபைகளும், ஐக்கிய சட்டசபையும் இருந்தன. அங்கத்தினர்கள் யாவரும் நியமிக்கப்பட்டார்கள். இதிலும் கூட சீனர்களுக்கும், இந்தியர்களுக்கும், மலாய்க்காரர்களுக்கும் போதிய பிரதிநிதித்துவம் கிடையாது. சர்வம் வெள்ளையர் மயம்! இந்த ஹிட்லராட்சியைத் திணிக்க முயற்சிக்கிறது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம். ஆனால், மலேயா மக்கள். இதை ஒருமுகமாக எதிர்க்கிறார்கள்,

மலேயா ஜனநாயக சங்கம்

சகல தேசீய இனங்களும் அடங்கிய "மலேயா ஜனநாயக சங்கம்" சென்ற மாதம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அது, கீழ்க்கண்ட 8 கோரிக்கைகளை வகுத்திருக்கிறது.

(1) மலேயாவுக்கு சுயாட்சி வழங்கவேண்டும்.

(2) கட்டுப்பாடின்றி, பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை வேண்டும்.

(3) ஜாதி, மத, தேசீய வித்தியாசமின்றி 21 வயதுக்கு மேற்பட்ட சகல ஆண்களுக்கும்பெண்களுக்கும் வோட் உரிமை அளிக்க வேண்டும்.

(4) பேசும் சுதந்திரம், எழுதும் சுதந்திரம், ஸ்தாபனம் அமைக்கும் சுதந்திரம் பரிபூர்ணமாக அளிக்கவேண்டும்.

(5) சகல மக்களுக்கும் இலவசமாகக் கல்வி போதிக்கவேண்டும். இத்துடன், இலவசமாக கைத்தொழில் கல்வியையும் புகட்ட வேண்டும்.

(6) யாவருக்கும் வேலை, வயதான காலத்தில் உபகாரச் சம்பளம், வேலையில்லாதவர்களுக்கு நிவாரணம் முதலிய சமூகப் பாதுகாப்புகளும், இலவசமாக வைத்திய உதவியும் அளிக்க வேண்டும்.

(7) குழந்தைகளைவேலைக்கமர்த்தக்கூடாது. ஜீவனச் சம்பளம் கொடுத்து, வாழ்க்கை நிலையை உயர்த்த வேண்டும்.

(8) வேலை கொடுப்பதில் ஜாதி, மத, தேசீய வித்தியாசங்களையும், நிறத் துவேஷத்தையும் பாராட்டக் கூடாது.

இந்த எட்டு கோரிக்கைகளை மலேயாவில் வசிக்கும் சகல தேசீய இனங்களும் ஆதரிக்கின்றன. இவைகளைப் பெற்றே தீருவோம் என்று ஒரே கொடியின்கீழ் ஒன்றுதிரண்டு உறுதியாக நிற்கிறார்கள்.

ஜனவரி 21ம் தேதி

லெனின் தினம்

இலங்கை தேசிய காங்கிரஸ்

பரிபூரண சுதந்திரத்தை விட்டுக்கொடுத்தது சோல்பரி கமிஷனை ஏற்றது

கம்யூனிஸ்டுகள் ராஜினமா

சென்ற வருடம் டிசம்பர் மாதம் 25-ந் தேதியன்று இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் விசேஷ பொதுக் கூட்டம் நடந்தது. அதில், இலங்கை தேசிய காங்கிரஸிலிருந்து கம்யூனிஸ்டுகள் அனைவரும் விலகுவது என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

சோல்பரி அரசியல் திட்டம் சிலோன் மக்களுக்குச் சுதந்திரமளிக்கவில்லை. சிலோன் கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுக்காரியதரிசி தோழர் பீட்டர் குனிமன் கூறுவதுபோல், "ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தைத் தேசத்தில் தொடர்ந்து நடத்துவதற்காகத்தான், இந்தத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. தேசீய இனங்களும், சமூகங்களும் ஒன்றோடொன்று முட்டி மோதுவதற்குத் தூபம் போடுகிறது"

தேசீய காங்கிரஸின் போக்கு

ஆனல் பிரித்தாளும் சூழ்ச்சி என்ற குட்டையில் ஊறித் தடித்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தத் திட்டத்தின் மூலமாக சிலோனிய மக்களைப் பிளவுபடுத்திற்று. அகில சிலோன் தமிழர் காங்கிரஸ் (யாழ்ப்பாணத் தமிழர்கள்) ஐம்பதுக் கைம்பது ஸ்தானங்களைக் கோரியது. ஆனல், இந்தத் திட்டம் அதை ஏற்கவில்லை. எனவே, இலங்கை தேசிய காங்கிரஸில் (பெரும்பாலோர் சிங்களவர்) உள்ள பிற்போக்காளர் இதைத் தங்களுடைய வெற்றியாகக் கருதி, சோல்பரி திட்டத்தை அங்கீகரிக்க முன் வந்தார்கள்.

இலங்கை தேசிய காங்கிரஸ் மிதவாதிகளின் கோட்டையாக இருந்தது. 1942-ம் வருடத்திற்குப் பின்பு பூரண சுதந்திர கோஷத்தை எங்கும் முழக்கிற்று. இலங்கைக் கம்யூனிஸ்டுக் கட்சி அங்கத்தினர்களும் இந்த ஸ்தாபனத்தில் சேர்ந்து கொண்டு, மக்களிடையே சுதந்திர ஆர்வத்தை ஊட்டி ஸ்தாபனத்தில் ஒன்றுதிரட்டி வந்தார்கள்.

அகில இலங்கை தேசிய காங்கிரஸின் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் சோல்பரி திட்டத்தை அங்கீகரிக்க வேண்டுமென்று ஓர் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதை எட்டுப் பேர்கள் ஆதரித்தார்கள். நடுநிலைமை வகித்தவர் ஒருவர். பீட்டர் குள்மன், எம். ஜி. மெண்டிஸ் ஏ. வைத்திலிங்கம், டாக்டர் ரத்ன பாலாஜி, நவரத்தினம் ஆகிய ஐந்து பேர்கள் அதை எதிர்த்தனர்.

பின்னர் நவம்பர் 24ந் தேதி நடந்த அகில இலங்கை காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில், 187 பேர்கள் சோல்பரி திட்டத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும், 63 பேர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடாதென்று வோட் அளித்தனர்.

ஏன் விலகினர்கள்?

எனவே சிலோன் தேசீய காங்கிரஸ் பூரண சுதந்திரப்பாதையை நழுவவிட்டதால் சிலோன் கம்யூனிஸ்ட் கட்சி விலகிக்கொண்டது.

சிலோன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி கீழ்க்கண்ட அறிக்கையை விடுத்திருக்கிறது.

1. பல வகுப்புகளைக்கொண்ட ஸ்தாபனமாக சிலோன் தேசீய காங்கிரஸ் வளரவில்லை. அதன் சட்ட திட்டங்கள் வித்தியாசம் பாராட்டாதபோதிலும் ஒரு சமூகத்தையே உட்கொண்ட ஸ்தாபனமாக வளர்ந்திருக்கிறது.

2. தேசபக்தி கொள்கைகள் இருந்தபோதிலும் மக்களை அதன் கீழ் ஒன்று திரட்டி, செயலில் தேசபக்த ஸ்தாபனமாக வளரவில்லை. தன் சொந்த சிறப்புகளாலும் சேவையாலும் இதர ஸ்தாபனங்களைப்போலவே பொதுஜன ஸ்தாபனமாக இன்னும் அது வளர வேண்டியிருக்கிறது. இது கம்யூனிஸ்ட், காங்கிரஸ்க்காக பிரசாரம் செய்வதனல் முடியாது; அது தானாகவே செய்தாகவேண்டும்.

3. சோல்பரி திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருகிறவர்களோடு நீண்டகாலம் ஒத்துழைப்பது அசாத்தியம்.

"மனிதர்களாக வாழ விரும்புகிறோம்"

(5-ம் பக்க தொடர்ச்சி)

தை மீறும் முதலாளிகளுக்கு, 500 ரூபாய் அபராதம் விதிக்கலாம் என்ற சட்டத்தை, 6 மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும்என்று திருத்தவேண்டுமென்பது அந்த திருத்தம். இதை அவர் பிரரேபித்தவுடன் கூட்டத்தில் ஒரே கரகோஷம். நிச்சயமாக சிறைக்கனுப்ப வேண்டும் என்ற கோஷம் கிளம்பியது. இதற்கப்பால் சுகாதார வீட்டு வசதிகள் வேண்டும் என்ற தீர்மானம் பிரரேபிக்கப்பட்டது.

இதை ஆதரித்த தோழர் உமானுதராவ், கோவை, காட்டூரில் உள்ள தொழிலாளரின் வீடுகளை வர்ணித்தார். ஒரே அறை, உருப்படி 9. 1937ல் வாடகை ரூ. 1-8-0. 1940-ல் 2 ரூ. 1942-ல் 3 ரூ. 1943-ல் 4 ரூ. 1944-ல் 5ரூ. இன்று அதையும் விட்டு வெளியேறும்படி கூறுகின்றனர். இனி போக்கிடம் எங்கே? எங்காவது குழி வெட்டி புதைந்து கிடப்பதைத் தவிர வேறுகதியில்லை என்றார்.

இந்த தீர்மானத்தை ஆதரிக்கும் முறையில், தோழர் ராமதாஸ், வீட்டு வசதி நிலைமையை அப்படியே சித்தரிக்கும் பாட்டு ஒன்றைப் பாடினர். 20,000 கூட்டமும் மெய்ம்மறந்தது.

ஷிப்டு முறைகளை மாற்றவேண்டும்; 9 மணி நேரவேலை என்று சொல்லி, பலவிதஷிப்டுகளில் வேலை செய்யவைத்து, ஒரு தீர்மானம் வந்தது. உடனே 8 மணி நேரமாக்க வேண்டும் வேலை நேரத்தை என்று கூறப்பட்டது அத்தீர்மானத்தில்.

இரவு வேலைக்கு $1\frac{1}{4}$ கூலி கொடுக்கப்படவேண்டும். இரண்டு ஷிப்டாயிருந்தால், முதல் ஷிப்டு காலை 8 மணிக்கு ஆரம்பமாய், 12மணிக்கு சாப்பாட்டிற்கு வெளியேவரவேண்டும். பிறகு 1 மணிக்கு உள்ளே போய் மாலை 4 மணிக்கு முடிந்துவிடவேண்டும். இரண்டாம் ஷிப்டு மாலை 4 மணிக்கு ஆரம்பித்து இரவு 8 மணிக்கு சாப்பாட்டுக்கு வெளியே வரவேண்டும். பிறகு 9 மணிக்குத் தொடங்கி, இரவு 1 மணியுடன் முடிந்துவிடவேண்டும் என்று கண்டிருந்தது. எங்கெல்லாம் மெஷீன்கள் சரியாயிருக்கின்றனவோ, அங்கெல்லாம் துணிப்பஞ்சத்தைப் போக்க 3 ஷிப்டுகள் வேண்டும்.

அதில், முதல் ஷிப்டு காலை 8 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை இடைவேளையில் 1 மணி ஓய்வுடன் முடிந்துவிடவேண்டும். இரண்டாவது ஷிப்டு, மாலை 4 மணிக்குத் துடங்கி இரவு 12 மணியுடன் முடிந்துவிடவேண்டும். கடைசி ஷிப்டு இரவு 12 மணிக்கு ஆரம்பித்து, காலை 8 மணிக்கு முடிந்துவிடவேண்டும் என்றும் கோரிற்று அத்தீர்மானம்.

இத்தீர்மானத்தின் மீது பேசிய தோழர் ரமணி, பல ஷிப்டு முறைகளின் விளைவுகளை நன்கெடுத்து உரைத்தார். 15 மணி நேரம்வரை மில்லுக்குள்ளோ, ரோட்டிலோ நடந்தலையவேண்டும். மிச்சமுள்ள 8மணி நேரத்தில் குளியல், சாப்பாடு, கடைக்குப்போதல், தூக்கம் எல்லாம்! இதனல், எத்தனை குழந்தைகள் தகப்பனை அறியாது பிர[...] கின்ற காட்சியைப் பார்[...] என்று கூறியவுடன் ஒரே [...]ஷம்.

ரெயில்வே வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு காட்டும் தீர்மானத்தில் தோழர் கே. டி. ராஜு பேசினர்.

இன்னும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவைகள் அடுத்த இதழில் விரிவாகக் கொடுக்கப்படும்.

கோவையில், கடந்த 4 வருஷங்களாக மின்சாரத்தை சிக்கனமாக உபயோகப்படுத்தவேண்டிய நிர்பந்தத்தினல் ஞாயிற்றுக்கிழமை தோறும் விடுமுறை எல்லா மில்களுக்கும் கிடையாது. ஒவ்வொரு நாளும் இரண்டொரு மில்களுக்கு லீவ். அப்படியிருந்தும், மகாநாட்டின் இரண்டு நாட்களிலும் 15,000 20,000 பேர்கள் கலந்துகொண்டு இரவு 11 மணி வரையில் கூட்டத்திலிருந்தது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக மில்களில் வேலை செய்யும் பெண்கள் மில்களிலிருந்து ஊர்வலமாக வந்த காட்சி மனதைக் கவர்ந்தது. ஸ்டேன்ஸ் மில்லில், மை[...] மாஸ்டர் பெண்களை இரண்டு குடி[...] களும் பயமுறுத்தினன். ஒரு [...] திரி கத்தியை எடுத்து மிரட்டினன். இந்த உருட்டல்களைக் கண்டு கோவை தொழிலாளப் பெண்கள் பயந்துவிடுவார்கள்? ஆத்திரம் கொண்டு, 'அடக்குமுறை ஒழிக' என்று கோஷமிட்டுக்கொண்டு கூட்டத்திற்கு வந்தனர்.

மில் தொழிலாளிகள் இனி விலங்குகளாய்ப் வாழப் போவதில்லை. நாகரீக வாழ்க்கைக்காகப் போராடுவோம் என்று 30, 31 தேதிகளில் போர்முரசு கொட்டி விட்டனர்.

'தாழ்த்தப்பட்டோர்' விடுதலை—

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று கம்யூனிஸ்டு கட்சி கூறுகிறது.

சமூகப் புரட்சி

இந்தக் கோரிக்கைகளுக்குப் போராடுவது ஒரு சமூகப் புரட்சிக்குப் போராடுவதாகும் என்பது எங்களுக்குத் தெரியும். தாழ்த்தப்பட்டவர் தலை நிமிர்ந்து நின்று சம அந்தஸ்துடன் சமூகத்தில் வாழ ஆரம்பித்தால் புதிய சமூகமே ஏற்பட்டு விட்டது என்று கூறலாம்.

ஆனல் இந்தப் புரட்சியை செய்து முடிப்பதற்கு சுதந்திர உணர்ச்சி வேண்டும், உணர்ச்சி மட்டுமல்ல; ஊக்கமும் வேண்டும்; ஊக்கம் மட்டுமல்ல உத்வேகமும் வேண்டும்.

சுதந்திர லட்சியம்

காங்கிரஸ் ஒன்றுதான் சுதந்திரப் போராட்டத்தை நடத்தும் ஒரே ஸ்தாபனம் என்று காங்கிரஸ் வாதிகள் கூறுகிறார்கள்.

"நாங்களும் சுதந்திரம் வேண்டும் என்கிறோம். சுயராஜ்யம் வேண்டும் என்கிறோம்" என்று டாக்டர் அம்பேத்கார் சென்னைக் கூட்டத்தில் சொன்னர்.

டாக்டர் அம்பேத்கார் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் தனிப்பெரும் தலைவராக விளங்குகிறார். தாழ்த்தப்பட்டோர் சம்மேளனமும் சுதந்திரம் வேண்டுமென்று கேட்கிறது என்று அவரது வாயிலிருந்து வந்திருப்பது வரவேற்கத் தக்க விஷயம். ஆனல் தாழ்த்தப்பட்ட சம்மேளனம் உத்யோகபூர்வமாக ஸ்தாபன ரீதியாக பரிபூர்ண சுதந்திரத் தீர்மானம் இன்னும் கோராதிருப்பது ஒரு குறைபாடு. சமூகத்தின் அடிமையிலும் அடிமையாய் வாழ்ந்துவரும் இப் பகுதியினர் சுதந்திரப் போராட்டத்தை எவ்வித தங்குதடையுமின்றி அதி தீவிரமாக ஆதரித்து அதில் பங்கெடுத்துக்[...]ள்ளக்கூடிய சக்தி. சுதந்திரம் [...] அதை உருப்படியான வ[...]கள் [...] எல்லாப் பகுதிகளுக்கும் [...]ன்ன குறைகள் நீங்குமென்[...] 4 [...]றிப்பிட்டு அதற்கெனக் கடைசிவரையிலும்—மற்றவர்கள் விட்டுப்போனலும் கடைசிவரையிலும் போராடக்கூடியவர்கள் தாழ்த்தப்பட்டோர். அவர்களுடைய சம்மேளனம், எப்படி தொழிலாளிகளின் கட்சியும், விவசாயிகளின் ஸ்தாபனங்களும் பாமரர் பாட்டாளிகளின் ஸ்தாபனங்களும் தெட்டத் தெளிவாக சுதந்திரக் கோரிக்கையை முன் வைக்கின்றனவோ அவ்வாறு முன் வைக்கவேண்டும்.

அதற்கு எந்தெந்த வகையில், என்னென்ன இடங்களில் போராடப் போகிறோம் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

அம்பேத்கார் பிரசங்கத்தைக் கேட்டுவிட்டு காங்கிரஸ் 'ஹரிஜன்' ஒருவர் கூறினர், "டாக்டர் காங்கிரஸைச் சக்கைபோடு போட்டுவிட்டார். ஆனல் அவர் திட்டம் என்ன, என்ன செய்யப்போகிறார் என்பதைச் சொல்ல வில்லையே" என்று கூறினர்.

நாங்கள் ஆதரிக்கிறோம்?

கம்யூனிஸ்ட்களாகிய நாங்களும் தாழ்த்தப்பட்ட சம்மேளனத்தின் நியாயமான கோரிக்கைகள் அனைத்தையும் ஆதரிக்கிறோம். 'அதற்காகப் போராடுகிறோம். உருப்படியான வகையில் போராடுகின்றோம். விவசாயிகள் இயக்கத்தில், விவசாயத் தொழிலாளிகளின் கூலி உயர்விற்கு வீட்டுவசதிக்கு, நில உரிமைகளுக்கு, குத்தகை பாத்தியதைகளுக்குப் போராடுகிறோம்.

தாழ்த்தப்பட்ட சம்மேளனமும் சுதந்திரப் போராட்ட அணியின் ஒரு பகுதியாக வந்து நின்றால், இன்னும் எவ்வளவு சிறப்பான பலமான சுதந்திர அணியைச் சிருஷ்டிக்க முடியும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

இன்று தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் என்றால் அதை சுதந்திர இயக்கத்துக்கு விரோதமாக, சுயராஜ்ஜியத்தின் குறுக்கே, நிற்கும் ஒரு இயக்கமாக காங்கிரஸ்வாதிகள்பலர் கருதுகின்றனர். மற்ற தேசீயவாதிகளிடம், மத்தியதர வகுப்பினிடம் அந்த எண்ணத்தைப் பரப்பப் பார்க்கின்றனர்.

சுதந்திர லட்சியத்தை பிரகடனப்படுத்துங்கள்

காங்கிரஸ் ஸ்தாபனம்ஒன்றுதான் சுதந்திரத்திற்காகப் போராடும் ஸ்தாபனம் மற்றவர்கள் சுதந்திரத்தின் விரோதிகள் என்ற அகம்பாவப் பேச்சு இதற்குக் காரணமாக இருக்கலாம். ஆனல் அது மட்டுமல்ல. உங்களுடைய குறைகளை, சுதந்திர ஆர்வத்தை பொதுமக்கள் சரிவரப் புரிந்துகொள்ளக்கூடிய வகையில், நீங்கள் உங்கள் லட்சியத்தைத் திட்டமிடவில்லை. சுதந்திரப் போராட்டம் என்பது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிடிப்பினின்று நாம் நாட்டை விடுவித்துக் கொள்வது என்று பொதுவாக அனைவரும் உணர்ந்திருக்கின்றனர். அந்த ஏகாதிபத்திய எதிர்ப்பை, அந்நியனை விரட்டியடிக்க விரும்பும் சுதந்திர வேட்கையை உங்கள் ஸ்தாபனத்தின் லட்சியத்திலும் கண்டால் உங்களுடைய கோரிக்கைகளுக்கு ஆதரவு பெருகும்; நியாயமானவர்களுடைய, கண்யமானவர்களுடைய, உண்மை தேசபக்தியை விரிவான அளவில் காண்பவர்களுடைய; ஆதரவும் திரண்டு வரும்.

"ஆறு கோடி பேரின் 2000 வருஷ தலைவிதியை மாற்றவேண்டும்என்று நாங்கள் போராடுகிறோம்" என்கிறார் அம்பேத்கார்.

கோடி கோடியாய் நூற்றாண்டுகளாய் சுரண்டப்பட்டு ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் பாட்டாளிகளின்கட்சியைத் தவிர வேறு யாரிடமிருந்து ஆறு கோடி தீண்டாதோருக்கு பேராதரவு கிடைக்கும். சுதந்திரத்தை விரும்பும் சகோதரர்கள் என்று உணர்ந்து தாழ்த்தப்பட்ட சம்மேளனமும் ஏகாதிபத்திய எதிர்ப்பு அணிவகுப்பிலே திரண்டு வர வேண்டுமென்று நாங்கள் கேட்கிறோம்.

மாணவர்கள் முன்னேறுகிறார் — பாமரர் பாடகர்

ஜாதிபேதத்தை ஒழித்தனர்

மதுரையில் இரண்டு கல்லூரிகள் உண்டு. ஒன்று "அமெரிக்கன் கல்லூரி" மற்றொன்று, "மதுரை கல்லூரி". (Madura College) மதுரை கல்லூரியில் சுமார் 500 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இது ஒரு II Grade காலேஜ். இதற்கு ஒரு ஹாஸ்டலும் உண்டு. இந்த ஹாஸ்டலில் சுமார் 84 மாணவர்கள் வசிக்கின்றனர். இந்த ஹாஸ்டலில் உள்ள உணவு விடுதியில் பிராமணருக்கு ஒரு பக்கம், பிராமணரல்லாதாருக்கு மற்றொரு பக்கமாக இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த நிலைமை கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகவே இருந்து வந்தது. இந்த 84 மாணவர்களில் 28 மாணவர்கள் பிராமணர்கள். இவர்கள் தனியாகத்தான் சாப்பிட்டு வந்தனர். சாப்பிடுமிடத்தில் இந்த இரு சாராருக்கும் இடையே ஒரு தட்டிதான் இருந்து வந்தது. அந்தத் தட்டியை நீக்கி எல்லா மாணவர்களும் உணவை உண்ணுவதற்கு இதுவரை இந்த கல்லூரியை நிர்வகிக்கும் அதிகாரிகள் ஒரு முயற்சியையும் எடுக்கவில்லை.

மாணவர் ஒற்றுமை

கடைசியாக மாணவர்களே ஒரு முகமான முடிவுக்கு வந்து சென்ற ஆண்டில் காந்தி ஜெயந்தியன்று (2-10-'45) ஹாஸ்டலில் நடந்த கூட்டத்தில் "மதுரை மாணவர் சங்கத்தைச்" (M.S.O) சேர்ந்த தோழர்கள் C. P. ராஜு, "இந்திய மாணவர் காங்கிரஸை"ச்சேர்ந்த (I.S.C.) சுப்பாராவ் முதலியவர்கள் பேசும் போது மாணவர்களிடையே இருக்கும் ஜாதி வேறுபாட்டையும் இன்னும் நாம் இவ்விதம் இரு கூறுகளாகப் பிரித்து வைக்கப்பட்டிருப்பது வருந்தத்தக்கதென்றும் இதை ஒழிக்க காந்தி ஜெயந்தியன்றே நாம் பிரதிக்ஞை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று பேசினர்.

இதே கூட்டத்தில் பேசிய ஆசிரியர் புருஷோத்தமனும் இதை ஆதரித்துப் பேசினார். அன்றிருந்தே எல்லா மாணவர்களும் பிரிவினையின்றி உணவு எடுத்துக் கொண்டனர். 6 பிராமண மாணவர்கள் மாத்திரம் தனித்திருந்தனர். இவர்கள் சமமாக எல்லோரோடும் உணவு எடுத்துக் கொள்ளவில்லை.

பின்னர் மாணவர் சங்கத்தைச் சேர்ந்த சி. பி. ராஜு, நவசக்தி, ராமசாமி முதலியவர்களும் இந்திய மாணவர் காங்கிரஸைச் (I.S.C.) சேர்ந்த சுப்பா ராவ், வெங்கடேசன் முதலியவர்களும் போர்டு காரியதரிசிகளையும் (இந்தக் கல்லூரி ஒரு கமிட்டியால் நிர்வகிக்கப்படுகிறது. இதில் நகரத்தின் சில பிரமுகர்களும் இருக்கிறார்கள்.) கல்லூரி பிரின்ஸிபாலையும் சந்தித்து நடந்தவைகளைத் தெளிவாகக் கூறினர். 2 நாட்கள் மாணவர்கள் இந்த விடுதியில் தங்கள் உணவை எடுத்துக் கொள்ளவில்லை. அதனால் உணவுப் பொருள்கள் வீணாயிற்று. பின்னர் முழு விவரங்களையும் கல்லூரி கமிட்டியின் சார்பாக பிரின்ஸிபால் வந்து விசாரித்தார். மாணவர்கள் தங்கள் கோரிக்கையடங்கிய ஒரு மகஜரைக் கல்லூரி கமிட்டியாருக்கு ஒரு நீண்ட அறிக்கையாக எழுதியனுப்பினர். பிரின்ஸிபால் உறுதியின்பேரில் எல்லா மாணவர்களும் தங்கள் உணவை ஹாஸ்டலிலேயே சாப்பிட்டார்கள். பிரின்ஸிபால் ஆரம்பத்திலிருந்தே மாணவர்களின் இந்த பரந்த, தேசபக்தி மிகுந்த மனப்பான்மையை ஆதரித்தும் எல்லோருடனும் சமமாக உணவு ஏற்க மறுத்த 6 மாணவர்களைக் கண்டித்தும் பெருவாரியான மாணவர்களுக்குச் சாதகமாகவே யிருந்தார். இது போற்றத் தக்கது. பிரின்ஸிபால் இந்த விவரங்கள் பூராவையும் கமிட்டியின் சார்பாக சேகரித்து போர்டுக்கும் எழுதினார்.

பாகுபாடு ஒழிந்தது

எல்லா மாணவர்களும் அந்த 6 பேரைத்தவிர ஒன்றாகவே உணவை உண்டு வந்தனர். பின்னர் கல்லூரி கமிட்டி (Madura College Board) டிசம்பர் முதல்வாரத்தில் ஒரு நியாயமான முடிவைத் தெரிவித்தது. அது என்ன? தடையாக இருந்த தட்டியை நீக்கி எல்லா மாணவர்களும் சமமாக—ஜாதி பாகுபாடின்றி உண்ணவேண்டும் என்று கூறிற்று.

மாணவர்களின் ஒற்றுமையாலும் பிரின்ஸிபாலின் ஆதரவாலும் கல்லூரிக் கமிட்டியின் நியாயமும் தேசபக்தியுமிகுந்த முடிவாலும் 10 வருடத்திற்குமேலாக இருந்த இந்த பாகுபாடு ஒழிந்தது.

அந்த முடிவைத் தெரிவித்த நாளன்று கல்லூரிக் கமிட்டியைச் சேர்ந்தவர்களும், பிரின்ஸிபாலும், வார்டனும் மாணவர்களுடன் மிக மகிழ்ச்சியுடன் ஹாஸ்டலில் உணவை உண்டனர். இந்த வெற்றிக்கு யார்தான் மாணவர்களைப் பாராட்டாமலிருக்க முடியும்?

இதுபோலவே மாணவர் சம்மேளனத்தின் ஊழியர்களும் மாணவர் காங்கிரஸை சேர்ந்தவர்களும் ஒத்துழைத்தால் நாம் பல காரியங்களை செய்து முடிக்கமுடியும்.

—ப. மாணிக்கம்
தமிழ்நாடு சம்மேளனக் காரியதரிசி.

ஏகாதிபத்தியம் ஒழிக ! ஒழிக !! முதலாளித்வம் ஒழிக ! ஒழிக !!
என்று மக்களிடம் பஜனை பாடுகிறார் தோழர் திருமூர்த்தி கோஷ்டியினர்

மனித சமூக வாழ்க்கைப் போராட்டத்தின் ஆயுதமாகவும் புதிய சமூக அமைப்பின் கருவியாகவும் கலை பயன்படுகிறது. பாதாளத்தில் வீழ்ச்சியுற்றுக் கிடக்கும் ஏழைமக்களை கைதூக்கி விடும் நற்பணியில் சிறந்த அம்சமாகும்.

திருச்சி தோழர் திருமூர்த்தி பாடுகிறாரென்றால் பல்லாயிரக்கணக்கில் பொதுமக்கள் கூடுகிறார்கள். ஏன்?

வேஷ்டிக்கிருந்தால் சட்டைக்கு இல்லை!
சோற்றுக்கிருந்தால்குழம்புக்கு இல்லை!

என்று பாடுகிறபோது சாதாரண ஒவ்வொருவர் வீட்டிலும் நடைபெறும் காட்சியை நினைவுறுத்துகிறார்.

கம்யூனிஸ்டு கட்சியின் தேர்தல் திட்டங்களைப்பற்றியும், கம்யூனிஸ்டுகளுக்கு ஏன் ஓட் போடவேண்டுமென்பதைபற்றியும், அவ்வப்போது நிகழும் அரசியல் சம்பவங்களைக் குறித்தும் அவர் இயற்றும்பாடல்கள் மிகவும்சிறந்தவையாயிருக்கின்றன.

மாகாணத் தொழிற்சங்க மகாநாடு நடந்தபோது மதுரையில்கூடிய 40 ஆயிரம் பேரும், "மறுபடியும் திருமூர்த்தி பாடவேண்டும்" என்று ஆரவாரித்தனர். திருச்சி பொதுக் கூட்டங்களில் திருமூர்த்தி பாடல்களுக்கு அமோகமான வரவேற்பு. விவசாயிகள் நடத்தும் மகாநாடுகளிலும் கூட்டங்களிலும் இவரது பாடல்களைக் கேட்டு தேச நிலை தெரிந்து கொள்ளுகிறார்கள்.

பாமர மக்களுக்கு எளிதில் புரியும்படியாகவும், அவர்களைத் துடிதுடிக்க வைத்து சுதந்திரப் போராட்டத்தில் அணிவகுக்க வரும்படியாகவும் இருக்கின்றன இவரது பாடல்கள். இவரைப்போன்ற கவிஞர்கள் இன்னும் எவ்வளவோ பேர் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். சந்தர்ப்பம் கொடுக்கப்படாத காரணத்தால் அவர்கள் எங்கு இருக்கிறார்களென்பதே தெரியவில்லை.

கவிஞர்கள் அனைவரும் சமூகத்தின் உண்மை நிலைமைகளை உள்ளபடி சித்தரித்து, சுரண்டும் கூட்டத்தை விரட்ட முன்வர வேண்டுமென்று கம்யூனிஸ்டு கட்சி வேண்டுகிறது.

பழனியில்— சம்பளத்தை குறைத்தனர்

மதுரை ஜில்லா பழனியில் ஒரு முனிசிபல் ஹைஸ்கூல் இருக்கிறது. பழனி தாலூகா முழுவதுக்கும் உள்ள ஒரே ஒரு உயர்தரப் பள்ளிக்கூடம் இதுதான். இதில் 900 மாணவர்கள் படிக்கிறார்கள்.

கட்டிடம் சிறியது; வெளியூர் மாணவர்களெல்லாம் இந்த ஸ்கூலுக்குத்தான் வரவேண்டும். ஹாஸ்டலும் கிடையாது.

5 வருஷங்களுக்கு முன்னால் தோழர்கள் தெய்வலிங்கம், நாச்சிமுத்து முதலியோர் தலைமையில் இங்கு மாணவர்சம்மேளனம் தோன்றிற்று.

தாலூகா பூராவுக்கும் இருக்கும் ஒரே ஹைஸ்கூல். இதில் வருஷத்துக்கு 9 மாதம் சம்பளம் வாங்கிவந்தார்கள். சாதாரணமாக 8 மாதம் தான் வாங்குவது வழக்கம். முனிசிபாலிடியோ ஏழை என்று கமிஷ்ணர் கூறுகிறார். சர்க்கார் கிராண்டோ போதாது. கல்வியைப் பரப்பி நாட்டை அபிவிருத்தி செய்ய சர்க்கார் காண்பிக்கும் அக்கரை இது.

1922ல் 9 மாதம் சம்பளம் கட்டிப் படிப்பது கஷ்டம் என்று மாணவர்கள் கிளர்ச்சி செய்தனர். வேலை நிறுத்தமும் செய்தனர். 8 மாதம் கட்டினால் போதும் என்று அதிகாரிகள் ஒப்புக்கொண்டார்கள். ஆனால் 1945ம் வருஷம் மறுபடி 9 மாதச் சம்பளம் என்று கூறிவிட்டார்கள்.

மாணவர் சங்கம் மறுபடி கிளர்ச்சி செய்தது, கூட்டங்கள் போட்டது; தீர்மானங்கள் நிறைவேற்றியது. ஆனால் இந்த உருப்படியான வேலை செய்வது சில காங்கிரஸ்காரர்களுக்கு வேப்பங்காயாகத் தோன்றிற்று. போட்டி மாணவர் ஸ்தாபனம். மாணவர் காங்கிரஸ் ஆரம்பித்து வைக்கப் பார்த்தார்கள். அவர்கள் முயற்சி வெற்றி பெறவில்லை.

மாணவர் சங்கத்தின் தூது கோஷ்டி முனிசிபல் கமிஷ்னரையும் முனிசிபல் சேர்மனையும் கண்டு பேசியது.

1946 லிருந்து பள்ளிக்கூடத்தில் சம்பளத்தை 8 மாதச் சம்பளமாக்க முடிவு செய்திருப்பதாக கமிஷனர் கூறினார், கவுன்சில் சேர்மன் அடுத்த வருஷம் ஹாஸ்டலும் கட்டித்தர முயற்சிப்பதாகக் கூறினார்.

சங்கத்தில் சேருங்கள்!

(பாட்டு)

சங்கத்தில் எல்லோரும் சேருங்க—தொழிலாளர்
சமுதாயம் ஓங்கவேணுங்க. (சங்)

1. செங்கொடி பிடிக்கணும்—சிவப்பு சட்டை போடணும்
தேசத்தின் நிலைமைதனை—சித்தரித்துப் பாடணும்
சங்கங்கள் அமைக்கனும்—ஜனசக்தியைத் திரட்டனும்
தரணியில் ஏகாதிபத்யச்—சனியனை விரட்டனும். (சங்)

2. அச்சமதைத் தள்ளணும்—ஆண்மையைக் கைக்கொள்ளனும்
அரசியல் படிக்கணும்—அதன்படி நடக்கணும்
துச்சவாழ்வு போகணும்—தூயவாழ்வுண்டாகணும்
தொழிலாளர் அனைவரும்—சுதந்திரமாய் வாழணும். (சங்)

3. அடிமை-ஏழை என்ற சொல்லை—அடியுடனே ஒழிக்கணும்
அவனியெங்கும் ஒருசமமாய்—அனைவரும் பிழைக்கணும்
கொடியபஞ்ச வறுமைநோயின்—குறைகளைத் தடுக்கணும்
கொஞ்சமும் தவறில்லாமல்—கொள்கைப்படி நடக்கணும். (சங்)

4. பாடுபடும் ஏழைமக்கள்—பட்டினியைப் போக்கணும்
பக்கா கொள்ளைக்காரக் கும்பல்—அக்ரமத்தை நீக்கணும்
ஈடில்லா மனித வாழ்வை—இன்ப மய மாக்கணும்
இப்புவியில் யாரையும் நம்—இயக்கத்திலே சேர்க்கணும். (சங்)

—தோழர் திருமூர்த்தி

புரட்சிவீரர்களின் கட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்பீர்கள், அனைவருடைய சுக வாழ்விற்கான பாதையைப்பற்றிக் கேட்பீர்கள்.

அடுத்து வரும் தேர்தல்களில் யாருக்கு ஓட்டுப் போடுவது என்பதைப்பற்றி நீங்கள் முடிவு செய்வதற்கு முன்னர் கம்யூனிஸ்டு கட்சியின் அழைப்பைக் கேளுங்கள்.

இந்தக் கட்சியிலே இன்னும்சிறையிலே வாடும் பகத் சிங்கின் தோழர்கள் இருக்கின்றனர்.

இந்தக் கட்சியிலே சிட்டகாங் ஆயுதசாலை வழக்கு வீரர்கள்—சிறைக்குள்ளே யிருப்பவர்களும் வெளியேயுள்ளவர்களும்—இருக்கின்றனர்.

இந்தக் கட்சியிலே வீர வங்கப் புதல்வர்கள் (பயங்கர வாதத்திலிருந்த) 1930-ம் வருஷத்தின் வங்க வீரர்கள் இருக்கின்றனர்.

இந்தக் கட்சியிலே வயதுமுதிர்ந்த இந்தியப் புரட்சி வீரர்கள்—கெதர் பாபாக்கள் என்று அன்புடன் அழைக்கப்படும் வீரர்கள் இருக்கின்றனர். 1910-ல் சுதந்திரப் பிரகடனம்செய்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்க்க முன்வந்தவர்கள் அவர்கள்.

1943-ல் எங்கள் கட்சியைத் தங்கள் உள்ளத்திலே ஆழப் பதிய வைத்துக்கொண்டு முக மலர்ச்சியுடன் உயிரிழந்தனர் கய்யூர் தோழர்கள்.

ஆயுள் தண்டனைபெற்று சிறையிலே கிடக்கும் வீரர்கள் 64 பேர் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள். இதுவரை அவர்கள் 781 வருடங்கள் சிறையிலே கழித்து விட்டனர்.

இந்த 64 பேரில் நாலு பேர் பகத் ஸிங்கின் தோழர்கள்; 43 வங்க வீரர்கள்; 16 கேரள ஊழியர்கள். அவர்களுடன் 1914ல் ஆயுள் தண்டனை பெற்ற பாபா குர்முக் ஸிங் 1922ல் தப்பியோடி உலகெங்கும் சுற்றி சுதந்திரப் பிரசாரம் செய்த குர்முக் ஸிங், 1936ல் மீண்டும் பிடித்தடைக்கப்பட்டுக் கிடக்கும் பழுத்த வீரர்.

இந்த நாட்டுப் பாட்டாளிகளின்—தொழிலாளி—விவசாயிகளின் வீரப் புதவல்ர்கள் போராடிப் புகழ்பெற்ற கட்சி.

இக் கட்சியிலுள்ள அறிவாளிகள், நாட்டிலே தலை சிறந்த அறிவாளிகளில் சிலர், எந்தக் கட்சியையும் அலங்கரிக்கக்கூடிய அறிவாளிகள்.

இந்தக் கட்சியில்தான் தொழிலாளிகளின் புதல்வர்கள், விவசாயிகளின் புதல்வர்கள் தத்தம் ஸ்தாபனங்களைக் கட்டி வளர்த்து அரசியல் தலைவர்களாகத் தயாராயிருக்கின்றனர்.

பாட்டாளிகளின் புதல்வர்கள் ஜாதி, மதபேதமின்றி தங்கள் சேவையினால் பொறுப்புள்ள பதவிகளுக்கு வந்து, இன்று கட்சியின் பிரதிநிதிகளாகத் தேர்தலில் நிற்கும் கட்சி இதுதான்.

மாபெரும் அணிவகுப்புக்கு அனைவரும் வாரீர்!

இந்த வீரர்களின், தியாகிகளின் கட்சி சொல்ல விரும்பும் செய்தியை வந்து கேளுங்கள்!

தொழிலாளிகாள்! உங்கள் தலைவர்கள் சொல்வதைக் கேட்கவாருங்கள்; கேட்டு சங்கத்தில் சேருவதற்கு வாருங்கள்.

விவசாயிகளே! உங்கள் தலைவர்களைக் கேட்க வாருங்கள், அவர்கள் சொல்வதைக் கேட்டு விவசாயிகள் சங்கங்களில் சேரத்தயாராக வாருங்கள்.

தொழிலாளிகளே! விவசாயிகளே! கட்சி அனுதாபிகளே! உங்கள் ஊரில், தெருவில், வீட்டில், பாக்டரியில், நீங்கள் கட்சிக்காக வசூலித்த பணத்தைக் கொண்டு வாருங்கள்.

கிராமம் வாரியாக, வட்டம் வட்டமாக, மில் மில்லாக வசூலிக்கப்பட்ட தொகையைக் கூட்டி எடுத்துரைப்போம். நீங்கள் [illegible] வசூல் செய்திருந்தால் பெருமை அடைவீர்கள்! வசூல் மோசமாயிருந்தால் அனைவருக்கும் [illegible] வருப்பாக இருக்கும்!

வாரீர்! வந்து கேளீர்!

நம் புத்தப் புதிய புத்தகங்களை வாங்கத் தயாராக வந்து சேருங்கள். நம்முடைய கட்சியைப் போல நல்ல வெளியீடுகளை நம்மைப் போன்ற வேகத்தில் யாரும் கொண்டு வருவதில்லை.

வாருங்கள்! வந்து கேளுங்கள்! உங்களுடைய பாஷையில் ஊர்ப் பாஷையில்—உங்களுக்குத் தெரிந்த மெட்டில்—உங்கள் உள்ளத்தைக் கவரும் நல்ல பாடல்களைக் கேட்பீர்கள்! வேறு எங்கும் அதைக் கேட்க முடியாது.

வாருங்கள்! [illegible]கிர வாரத்திற்கு திரண்டு வாருங்கள்!

Edited, Printed and Published by P. RAMAMURTHI at the "Janasakthi" Press, 1/6, Davidson Street, G. T., Madras. Regd. No. [illegible]514.